## உபத்திரவக்கால சம்பவங்கள்

# மகா உபத்திரவக்காலம்

( பாகம் 1 )

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு !

**இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்**. இதற்கு முந்தைய வேதபாடங்களில், **வேதாகம ஆட்சிமுறை காலங்கள்**, **சபை எடுத்துக்கொள்ளப்படுதல்** ( **Rapture** ), **அந்திக்கிறிஸ்து,** 19 உபத்திரவக்கால சம்பவங்கள் பற்றி படித்தோம். இந்த வேத பாடத்தில் அதற்கு அடுத்தபடியாக நடக்கப்போகும் **"மகா உபத்திரவ கால சம்பவங்களை"** தொடர்ந்து படிப்போம்.

### 1. தேவனுடைய ஆலயமும் பரிசுத்த நகரமும் தீட்டுப்படுதல் *( வெளி 11:1-2 ).*



***வெளி 11: 2*** *ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள்.*

இந்த குறிப்பிட்ட சமயத்தில் இருக்கும் எருசலேம் தேவாலயம், அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் அவனது பாதுகாப்பின் கீழ் கட்டப்பட்டிருக்கும் தேவாலயம். தேவாலயத்தின் பிராகாரம் ஏற்கனவே புறஜாதியாருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது மீதி பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும் எருசலேமும் அந்திக்கிறிஸ்துவால் கைப்பற்றப்படும், அடுத்த **42** மாதங்களுக்கு அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் எருசலேமும் தேவாலயமும் இருக்கும் ***( வெளி 11:2; 13:1-18; 2 தெச 2:2-4; தானி 11:40-45; 12:7; மத் 24:15 ).***




### 2. இரண்டு சாட்சிகள் பூமியில் ஊழியம் *(வெளி 11:3-12 ).*

***வெளி 12: 3*** *என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்.*

சில வேத பண்டிதர்கள் இந்த இரண்டு சாட்சிகளும் ஏனோக்கும், எலியாவும் ஆக இருக்கலாம் என்று கருதுகிறார்கள். இவர்கள் மகா உபத்திரவக்காலம் முழுவதும் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். மிகுந்த வல்லமை உடையவர்களாக இருப்பார்கள். அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். மூன்றரை வருட கடைசியில் பாதாளத்தில் இருந்து ஏறிவரும் மிருகம் அந்திக்கிறிஸ்துவை உபயோகித்து அவர்களை கொன்று போடும். அவர்களது உடல்கள் எருசலேம் நகர வீதியில் **மூன்றரை நாட்கள்** கிடக்கும். அச்சரீரங்களை உலக மக்கள் பார்ப்பார்கள். மூன்றரை நாட்களுக்கு பின் தேவனுடைய ஜீவ ஆவி அச்சரீரங்களுக்குள் பிரவேசித்து, அவர்கள் உயிரோடெழுந்து வானத்துக்கு செல்வார்கள்.



### 3. எருசலேமில் பெரிய பூமியதிர்ச்சி




*வெளி 11:13 அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது; மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.*

இது ஏழாவது பொற்கலசத்தின் பூமியதிர்ச்சியை குறிப்பிடுகிறது. இது இரண்டு சாட்சிகளும் உயிர்த்தெழுந்த உடன், மகா உபத்திரவக்காலத்தின் கடைசியில் சம்பவிக்கும். இதில் **7000** பேர் மரித்துப்போவார்கள்.

### 4. ஏழாம் எக்காளம். கெம்பீர சத்தங்கள் *(வெளி 11:15 -18 ).*




*வெளி 11:15 ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.*

**ஏழாம் எக்காளம்**, *வெளி 11:15* ல் இருந்து *13:18* வரை உள்ள அனைத்து சம்பவங்களையும் உள்ளடக்கியது.
இங்கே அறிவிக்கப்படும் அறிவிப்புக்கள், இப்போது சம்பவிக்காது.
ஆனால் மூன்றரை வருடங்களுக்கு பிறகு *வெளி 19:11-21* ல், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் சம்பவிக்கும்.

### 5. பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்படுதல்




*வெளி 11:19 அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின.*

தேவனுடைய ஆலயத்தின் உடன்படிக்கை பெட்டி அவரது பிரசன்னத்தையும் அவரது உடன்படிக்கையின் உறுதியையும் காண்பிக்கிறது. உடன்படிக்கை பெட்டியின் மேல் இருக்கும் கிருபாசனம் அவரது இரக்கத்தை காண்பிக்கிறது *( ஆப 3:2 )*

### 6. சூரியனை அணிந்திருக்கும் ஸ்திரீயின் பிரசவ வேதனை




*வெளி 12:1-2 1. அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன.*
*2. அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவவேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்.*

சூரியனை அணிந்திருக்கும் ஸ்தீரி, **இஸ்ரவேல் நாட்டைக்**குறிக்கிறது. சூரியன், சந்திரன், 12 நட்சத்திரங்கள் இஸ்ரவேலையே குறிக்கின்றன ***( ஆதி 37: 9-11 )***




## 7. வலுசர்ப்பம் ஆண்பிள்ளையை ( 1,44,000 யூதர்கள் ) அழிக்க முயற்சித்தல் *( வெளி 12:3,4 )*

***வெளி 12: 4*** *அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.*

மூன்றில் ஒரு பங்கு தூதர்களோடு தேவனுக்கு விரோதமாக லூசிபர் முன்பு எழும்பியதை இவ்வசனம் குறிப்பிடுகிறது. சாத்தான் இப்போது ஸ்தீரியின் ஆண்பிள்ளையை பட்சிக்கும்படியாக அவள் முன்பு நிற்கிறான். இந்த ஆண்பிள்ளை முத்திரையிடப்பட்ட **1,44,000** யூதர்களை குறிக்கிறது ***( வெளி 7:1-8; 9:4 14;1-5 )***




## 8. ஆண்பிள்ளை (1,44,000யூதர்கள் ) தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல்

***வெளி12:5*** *சகல ஜாதிகளையும் இரும்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது.*

இந்த **1,44,000** பேரும் எக்காளங்களின் அழிவுகளில் இருந்து பாதுகாக்கப்படும்படியாக முத்திரையிடப்பட்டவர்கள். ஏழாம் எக்காளத்துக்கு பிறகு இவர்கள் தேவனால் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இதனால் அவர்கள், அவர்களை அழிக்க நினைக்கும் சாத்தானுக்கு தப்புவித்துக்கொள்வார்கள்.




## 9. ஸ்திரீ, 3 ½ வருடங்கள் வனாந்திரத்துக்கு ஓடிப்போகுதல்.

***வெளி 12:6*** *ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது.*




மகா உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேலை போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் இடத்தின் பெயர் **" சேலா ".** ***( 2 ராஜாக்கள் 14:7; ஏசாயா 16:1).*** இதற்கான கிரேக்க பேயர் **"பெட்ரா".** இந்த இடம் இப்போது ஜோர்டான் நாட்டுக்குள் இருக்கிறது. இப்போது இந்த இடம் **"மறக்கப்பட்ட கடந்த கால நகரம்"** என்றும், **"ரோஸ் சிவப்பு நகரம்"** என்றும் அழைக்கப்படுகிறது. யாரும் எளிதில் கடந்து செல்ல முடியாத, சுமார் 1000 மலைக்குகைகளையும், பாறைக்குள் செதுக்கப்பட்ட



பழங்கால நினைவுச்சின்னங் களையும், மறைவிடங்களையும் கொண்டது. குடிதண்ணீர் வசதிகளும், சிற்றோடைகளும், ஊற்றுக்களும் இருக்கின்றன. ஒரு பெரிய சேனை வந்தாலும் இதனுள் மறைந்திருக்கின்றவர்களை ஒன்றும் செய்ய முடியாத அளவுக்கு இயற்கைப்பாதுகாப்புகளை கொண்ட ஒரு பயங்கரமான இடம். பண்டைய காலத்தில் ஒரு முக்கிய நகரமாக இருந்து பின் மனித நடமாட்டம் இல்லாமல் ஆகிப்போன இடம். இங்கே மகாஉபத்திரவக்காலத்தில், அந்திக்கிறிஸ்துவுக்கு தப்பி இஸ்ரவேல் ஜனம் **1260** நாட்கள் ஒளிந்திருக்கும். ஜொர்டானியரும், அரேபியரும் அச்சமயத்தில் இஸ்ரவேலுக்கு ஆதரவும், பாதுகாப்பும், உணவும் அளிப்பார்கள்.

## 10. வானத்திலே யுத்தம் *( வெளி 12:7-12 ).*




*7 வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.*
*9 உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.*

## 11. வலுசர்ப்பம் ஸ்திரீயை துன்பப்படுத்துதல் *( வெளி 12:13-16 ).*




*13வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது.*
*14 ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது.*
*15 அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டுபோகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது.*
*16 பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது.*




ஆண்பிள்ளையை **( 1,44,000 யூதர்களை )** தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று அறிந்த சாத்தான், அந்த ஆண்பிள்ளையை பெற்ற ஸ்தீரியை ( **இஸ்ரவேலை** ) துன்பப்படுத்துவான். ஆனால் இஸ்ரவேல் **“சேலாவுக்கு “** தப்பிச்செல்லும். அங்கே இஸ்ரவேல் ஜனம் மூன்றரை வருடங்கள் போஷிக்கப்படும். நதி போன்ற வெள்ளம், அந்திக்கிறிஸ்துவின் படைகளை குறிக்கிறது *( தானி 9:26-27; 11;21-26; எரே 46:7-8 ).* அந்திக்கிறிஸ்துவின் இந்த படைகள், தப்பிச்செல்லும் இஸ்ரவேலை




அழிக்க முயற்சிக்கும். அப்போது பூமி பிளந்து அந்திக்கிறிஸ்துவின் படைகளை விழுங்கும்.

## 12. வலுசர்ப்பம் ஸ்திரீயின் சந்ததியோடு யுத்தம்பண்ணுதல்

*வெளி 12:17 அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று.*

தப்பிச்சென்ற இஸ்ரவேலை அழிக்க முடியாததால், சாத்தான் மிகவும் கோபங்கொண்டு தன் கோபத்தை, இஸ்ரவேலில் எஞ்சி இருக்கும் யூதர்கள் மேல் காண்பிப்பான். இப்போது எஞ்சி இருப்பவர்கள், **1,44,000** யூதர்கள் எடுத்துக்கொள்ளப்படுவதை கண்டு தாங்களும் தேவன் மேல் விசுவாசம் வைத்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள். இவர்களைத்தான் வேதாகமம் **ஸ்தீரியின் சந்ததி** என்று குறிப்பிடுகிறது.




## 13. மிருகம் கடலில் இருந்து வெளிவருதல். அந்திக்கிறிஸ்துவுக்கு ராஜ்யங்கள் மேல் அதிகாரம்

***( வெளி 13:1-10,18 ).***

*13: 1 பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.*

*18 இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.*



இங்கே **சமுத்திரம்** என்று குறிப்பிடப்படுவது பழைய ரோம சாம்ராஜ்யத்தின் நிலப்பரப்பில் அப்போது இருக்கும் **10** நாடுகளில் வசிக்கும் மக்களை குறிப்பிடுகிறது. இந்த மிருகம் “அந்திக்கிறிஸ்து”. மிருகத்தின் **7** தலைகள் **7** ராஜ்யங்களை குறிக்கின்றன. **10** கொம்புகளும், பழைய ரோம சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட நிலப்பரப்பில் உருவாக்கப்படப்போகும் **10** ராஜ்யங்களை குறிப்பிடுகின்றன. அந்திக்கிறிஸ்து, முதலில் இந்த **7** நாடுகளின் நிலப்பரப்புக்கு அதிபதியாவான். ***( வெளி 13:1; 17:8-17; தானியேல் 7:23-24 ).***



**14. மிருகம் பூமியில் இருந்து வெளிவருதல். கள்ள தீர்க்கதரிசி மிருக ஆராதனையை தொடங்குதல்**

*( வெளி 13:11-17 ).*




*வெளி 13: 11 பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது.*

*12 அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது.*

இந்த வேறொரு மிருகம் கள்ள தீர்க்கதரிசியை குறிப்பிடுகிறது. இவன் பூமியின் மக்களில் இருந்து எழும்பும் ஒரு மனிதனாக இருப்பான். இவன் அந்திக்கிறிஸ்துவை பூமியின் மக்கள் ஆராதிக்கும்படி செய்வான். பெரிய அற்புதங்களை செய்வான். உலக மக்கள் மிருகத்தின் முத்திரையையாவது, நாமத்தையாவது, நாமத்தின் இலக்கத்தையாவது தரிக்கும்படி செய்வான். அவ்வாறு தரிக்காதவர்கள் வாங்கவோ விற்கவோ முடியாது.



( தொடரும்........ )

**இத்தகைய மகாக்கொடிய உபத்திரவக்காலத்துக்கு தப்பி, எடுத்துக்கொள்ளப்பட ஆயத்தமாயிருப்போம்....... மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்.**



***குறிப்பு: இதன் தொடர்ச்சியாக*** **- மகா உபத்திரவக்கால சம்பவங்கள் ( பாகம் 2 ) இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அர்மகெதோன் யுத்தம், ஆயிர வருட அரசாட்சி, கோக் மகோக் யுத்தம், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள்.** இதற்கு முன்பு தொடர்ச்சியாக வேதாகம ஆட்சி முறைக்காலங்கள், சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள் ஆகிய வேதபாடங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**உபத்திரவக்கால சம்பவங்களைப்பற்றியதான வீடியோவை - (Power point slide show with narration and Bible references in Tamil) நம்முடைய இணையதளத்தின் "வீடியோ" பகுதியிலேயோ அல்லது http://www.youtube.com/watch?v=j3fJtehXe_A என்ற இணைப்பிலோ பார்வையிடும்படி உங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**

If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com
Ph: 968 25572195, 99663557.

Resources; International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament). All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses may be above or below than the mentioned English Bible verse.

-------------------------